भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार से प्रकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

**नई दिल्ली, मंगलवार, 20, अक्टोबर 1998/1920 सका**

New Delhi, Tuesday 20th October 1998/1920 Saga

*புது தில்லி, 1998 அக்டோபர் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1920 சக*

---

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi, the 20th October 1998

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

*புது தில்லி, 20 அக்டோபர் 1998*

The translation in Tamil of the Registration of Births and Deaths Act, 1969 (18 of 1969), The Medical Termination of Pregnancy Act, 1971 (34 of 1971), The Voluntary Surrender of Salaries (Exemption from Taxation) Act, 1961 (46 of 1961), The Excise (Malt Liquors) Act, 1890 (13 of 1890), The Government Buildings Act, 1899 (4 of 1899), The Indian Easements Act, 1882 (V of 1882), The Personal Injuries (Compensation Insurance) Act, 1963 (37 of 1963), The Provisional Collection of Taxes Act, 1931 (16 of 1931), The Marriages Validation Act, 1892 (2 of 1892), The River Boards Act, 1956 (49 of 1956), The Telegraph Wires (Unlawful Possession) Act, 1950 (74 of 1950), The Commissions of Inquiry Act, 1952 (60 of 1952), The Indian Statistical Institute Act, 1959 (57 of 1959), The Legal Tender (Inscribed Notes) Act, 1964 (28 of 1964), The Payment of Wages Act, 1936 (4 of 1936), The Citizenship Act, 1955 (57 of 1955), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 (18/1969), கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 (34/1971), தம் விருப்பாக வரையூதியங்களை ஒப்புவித்துவிடுதல் (வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு) சட்டம், 1961 (46/1961), (மாத்தேறல்கள்) ஆயச் சட்டம், 1890 (13/1890), அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 (4/1899), இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 (V/1882), உடலூறுகள் (சரியீட்டுக் காப்பீடு) சட்டம், 1963 (37/1963), தாற்காலிகமாக வரிகள் ஈட்டுதல் சட்டம், 1931 (16/1931), திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1892 (2/1892), ஆற்றுவாரியங்கள் சட்டம், 1956 (49/1956), தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) சட்டம், 1950 (79/1950), விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (60/1952), இந்தியப் புள்ளியியல் சட்டம், 1959 (57/1959), சட்டச் செலாவணி (பொறிக்கப்பட்ட பணத்தாள்கள்) சட்டம், 1964 (28/1964), கூலிகொடுத்தல் சட்டம், 1936 (4/1936), குடிமைச் சட்டம், 1955 (57/1955), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 74.00

# பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969

## (சட்ட எண் 18/1969)

பிறப்புகள் மற்றும் இறப்புகளைப் பதிவு செய்வதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் இருபதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

### அத்தியாயம் I

### முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று, ஒரு மாநிலத்தில் செல்லாற்றல் பெறும்:

வரம்புரையாக: ஒரு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம்.

2. (1) இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகளும் பொருள் கோளும்.

(அ) “பிறப்பு” என்பது, உயிருள்ள பிறப்பு அல்லது உயிரற்ற பிறப்பு என்று பொருள்படும்;

(ஆ) ''இறப்பு'' என்பது, உயிருள்ள பிறப்பு நிகழப்பெற்ற பின்பு எப்போதாயினும் உயிரியக்கத்தின் அறிகுறி அனைத்தும் நிலையாக மறைதல் என்று பொருள்படும்;

(இ) “ கர்ப்ப முதிர்கரு இறப்பு” என்பது, கர்ப்பத்தின் காலஅளவைப் பொருட்படுத்தாமல், தாயிடமிருந்து கருவில் உண்டானதை முழுமையாக வெளியேற்றுவதற்கு அல்லது பிரித்தெடுப்பதற்கு முன்பாக உயிரியக்கத்தின் அறிகுறி அனைத்தும் இல்லாதிருத்தல் என்று பொருள்படும்;

(ஈ) ''உயிருள்ள பிறப்பு'' என்பது, கர்ப்பத்தின் காலஅளவைப் பொருட்படுத்தாமல், தாயிடமிருந்து கருவில் உண்டானதை முழுமையாக வெளியேற்றுவது அல்லது பிரித்தெடுப்பது என்று பொருள்படும்; ஆனால், அது அவ்வாறு வெளியேற்றப்பட்ட அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பின்பு மூச்சுவிடுதல் அல்லது உயிரியக்கத்தின் பிற அறிகுறி எதனையும் காட்டுதல் வேண்டும் மற்றும் அத்தகைய பிறப்பில் உண்டான ஒவ்வொன்றும் உயிருடன் பிறந்ததாகக் கருதப்படும்;

(உ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ள விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஊ) “மாநில அரசாங்கம்” என்பது, ஓர் ஒன்றியத்து ஆட்சி நிலவரையைப் பொறுத்தவரை அதன் ஆளுகையர் என்று பொருள்படும்;

(எ) “ உயிரற்ற பிறப்பு” என்பது, கருவில் உண்டாவது குறைந்தது வகுத்துரைக்கப்பட்டுள்ள கர்ப்பக் காலஅளவை நிறைவேற்றியுள்ளவிடத்து, கர்ப்ப முதிர்க்கரு இறப்பு என்று பொருள்படும்.

(2) வட்டாரம் எதிலும் செல்லாற்றலில் இல்லாத சட்டம் எதற்கும் இந்தச் சட்டத்திலுள்ள சுட்டுகை எதுவும், அந்த வட்டாரத்தைப் பொறுத்தமட்டில், அந்த வட்டாரத்தில் செல்லாற்றிலில் இருக்கும் நேரிணையான சட்டத்திற்கான ஒரு சுட்டுகையாக பொருள்கொள்ளப்படும்.

## அத்தியாயம் II

இந்தியாவின் தலைமைப் பதிவாளர்.

3. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தியாவின் தலைமைப் பதிவாளர் என்று வழங்கப்பட வேண்டிய ஒருவரை அமர்த்தலாம்.

(2) மைய அரசாங்கம், ஆற்றுவதற்குத் தலைமைப் பதிவாளர் அவ்வப்போது அதிகாரமளிக்கலாகும் இந்தச் சட்டத்தின்படியான தலைமைப் பதிவாளரின் பதவிப்பணிகளை அவருடைய கண்காணிப்பு மற்றும் பணிப்புரையின்கீழ் ஆற்றும் நோக்கத்திற்காக, தான் பொருத்தமெனக் கருதும் பிற அலுவலர்களையும்கூட அத்தகைய பதவிப்பெயர்களுடன் அமர்த்தலாம்.

(3) தலைமைப் பதிவாளர், இந்தச் சட்டம் அளாவுகிற ஆட்சி நிலவரைகளில் ஏற்படும் பிறப்புகளையும் இறப்புகளையும் பதிவு செய்வது குறித்துப் பொதுவான பணிப்புரைகளைப் பிறப்பிக்கலாம் மற்றும் பிறப்புகளையும் இறப்புகளையும் பதிவு செய்வதில் முதன்மைப் பதிவாளர்களின் செயல்களை ஒருங்கிணைக்கவும் ஒருமைப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன ஆட்சி நிலவரைகளில் இந்தச் சட்டத்தின் செயற்பாடு பொறுத்து மைய அரசாங்கத்திற்கு ஓர் ஆண்டறிக்கையைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

முதன்மைப் பதிவாளர்.

4. (1) மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, மாநிலத்திற்கு ஒரு முதன்மைப் பதிவாளரைப் பணியமர்த்தலாம்.

(2) மாநில அரசாங்கம், ஆற்றுவதற்குத் தலைமைப் பதிவாளர் அவ்வப்போது அதிகாரமளிக்கலாகும் அவருடைய பதவிப்பணிகளை முதன்மைப் பதிவாளரின் கண்காணிப்பு மற்றும் பணிப்புரையின்கீழ் ஆற்றும் நோக்கத்திற்காகத் தான் பொருத்தமெனக் கருதும் பிற அலுவலர்களையும் கூட அத்தகைய பதவிப் பெயர்களுடன் அமர்த்தலாம்.

(3) முதன்மைப் பதிவாளர், மாநில அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பணிப்புரைகளுக்குட்பட்டு, மாநிலத்தில் இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகள் மற்றும் ஆணைகளின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக, மாநிலத்தில் முதன்மை நிருவாக அதிகாரியாக இருப்பார்.

(4) முதன்மைப் பதிவாளர், திறமை மிக்கப் பதிவுமுறையை உறுதி செய்வதற்காகப் பொருத்தமான அறிவுரைகளை அளிப்பதன் வாயிலாக அல்லது பிறவாறு, மாநிலத்தில் பதிவுப் பணியை ஒருங்கிணைப்பதற்கும், ஒருமைப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்; மற்றும் மாநிலத்தில் இந்தச் சட்டம் செயல்படும் முறை பொறுத்த அறிக்கையை, பிரிவு 19 இன் உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவர அறிக்கையுடன் கூட வகுத்துரைக்கப்படலாகும் முறையிலும் கால இடைவெளிகளிலும் தயாரித்து மாநில அரசாங்கத்திற்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

பதிவுக் கோட்டங்கள்.

5. மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, மாநிலத்திற்குள் உள்ள ஆட்சிநிலவரையை, அது பொருத்தமெனக் கருதும் பதிவுக் கோட்டங்களாகப் பிரித்து வெவ்வேறு பதிவுக் கோட்டங்களுக்கு வெவ்வேறு விதிகளை வகுத்துரைக்கலாம்.

மாவட்டப் பதிவாளர்கள்.

6. (1) மாநில அரசாங்கம், ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டப் பதிவாளரையும் மற்றும் அது பொருத்தமெனக் கருதும் எண்ணிக்கையில் கூடுதல் மாவட்டப் பதிவாளர்களையும் அமர்த்தலாம்; அவர்கள், மாவட்டப் பதிவாளரின் பொதுவான கட்டாளுகைக்கும் பணிப்புரைக்கும் உட்பட்டு, மாவட்டப் பதிவாளர், அவ்வப்போது ஆற்றுவதற்கு அவர்களுக்கு அதிகாரமளிக்கலாகும் மாவட்டப் பதிவாளரின் பதவிப்பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

(2) மாவட்டப் பதிவாளர், முதன்மைப் பதிவாளரின் பணிப்புரைக்கு உட்பட்டு, மாவட்டத்தில் ஏற்படும் பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவை மேற்பார்வையிடுவார் மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்களையும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவ்வப்போது பிறப்பிக்கப்படும் முதன்மைப் பதிவாளரின் ஆணைகளையும், மாவட்டத்தில் நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாக இருப்பார்.

7. (1) மாநில அரசாங்கம், நகராட்சி, ஊராட்சி அல்லது பிற வட்டார அதிகாரஅமைப்பில் அதிகாரவரம்பிற்குள் உள்ள வட்டாரத்தை அல்லது பிற வட்டாரம் எதனையும் அல்லது அவற்றில் ஏதாவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவற்றை உள்ளடக்கிய ஒவ்வொரு வட்டாரப் பரப்பிடத்திற்கும் ஒரு பதிவாளரை அமர்த்தலாம்: பதிவாளர்கள்.

வரம்புரையாக: மாநில அரசாங்கம், ஒரு நகராட்சி, ஊராட்சி அல்லது பிற வட்டார அதிகாரஅமைப்பு எதனையும் பொறுத்த நேர்வில், அதனுடைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரையும் ஒரு பதிவாளராக அமர்த்தலாம்.

(2) ஒவ்வொரு பதிவாளரும், கட்டணம் அல்லது வெகுமதி இன்றி, பிரிவு 8 மற்றும் பிரிவு 9இன்படி அவருக்குக் கொடுக்கப்படும் அனைத்துத் தகவல்களையும் அதன் நோக்கத்திற்காகப் பேணப்படும் பதிவேட்டில் பதிவு செய்தல் வேண்டும், மற்றும் அவருடைய அதிகாரவரம்பிற்குள் ஏற்படும் ஒவ்வொரு பிறப்பையும் ஒவ்வோர் இறப்பையும் குறித்து அவர் தமக்குக் கவனமாகத் தகவல் கொடுப்பதற்கும், பதிவு செய்யப்பட வேண்டுறுத்தப்பட்டுள்ள விவரங்களை உறுதி செய்து கொண்டு அதைப் பதிவு செய்வதற்கும் கூட நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு பதிவாளரும், அவர் எந்த வட்டாரப் பகுதிக்காக அமர்த்தப்பட்டிருக்கிறாரோ அந்த வட்டாரப் பகுதியில் ஓர் அலுவலகத்தைக் கொண்டிருப்பார்.

(4) ஒவ்வொரு பதிவாளரும், முதன்மைப் பதிவாளர் பணிக்கலாகும் நாட்களிலும், நேரங்களிலும், பிறப்புகளையும், இறப்புகளையும் பதிவு செய்யும் நோக்கத்திற்காகத் தனது அலுவலகத்திற்கு செல்லுதல் வேண்டும்; மற்றும் எந்த வட்டாரப் பகுதிக்காக அவர் அமர்த்தப்பட்டிருக்கிறாரோ அந்த வட்டாரப் பகுதிக்கான பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவாளர் என்ற சேர்ப்புடன் தனது பெயர், தான் வருகை தரும் நாட்கள், நேரங்கள் ஆகியவற்றை வட்டார மொழியில் தாங்கியிருக்கும் பலகை, பதிவாளர் அலுவலகத்தின் வெளிப்புறக் கதவின் மேல் அல்லது அருகில் வட்டார மொழியில் தெளிவாகத் தெரிகிற ஏதாவதோர் இடத்தில் வைக்கப்படுமாறு செய்தல் வேண்டும்.

(5) பதிவாளர், முதன்மைப் பதிவாளரின் முன் ஒப்பேற்புடன் சார்பதிவாளர்களை அமர்த்தலாம்; மற்றும் தனது அதிகாரவரம்பிற்குள் உள்ள குறித்துரைக்கப்பட்ட பகுதிகளைப் பொறுத்து தனது அதிகாரங்களில் அல்லது கடமைகளில் எதனையும் அல்லது அனைத்தையும் அவர்களுக்குக் குறித்தளிக்கலாம்.

## அத்தியாயம் III

### பிறப்புகளையும் இறப்புகளையும் பதிவு செய்தல்

8. (1) தங்களின் முழு அறிவுத்திறனுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப, பிரிவு 16 இன் உட்பிரிவு (1) இன்படி மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படும் படிவங்களில் பதிவு செய்யப்படுமாறு வேண்டுறுத்தப்பட்டுள்ள பல்வேறு விவரங்கள் பற்றிய தகவலை வாய்மொழியாகவோ அல்லது எழுத்து வாயிலாகவோ வகுத்துரைக்கப்படலாகும் காலத்திற்குள் பதிவாளருக்குக் கொடுப்பது அல்லது கொடுக்கப்படுமாறு செய்வது கீழே குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் கடமையாகும்:— பிறப்புகளையும் இறப்புகளையும் பதிவு செய்யுமாறு வேண்டுறுத்தப் பட்டுள்ள ஆட்கள்.

(அ) கூறுகள் (ஆ) முதல் (உ) வரையில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் அல்லாத குடியிருப்பிடமாகவோ அல்லது குடியிருப்பிடமல்லாததாகவோ உள்ள வீடு ஒன்றில் ஏற்படும் பிறப்புகளை அல்லது இறப்புகளைப் பொறுத்தவரை, வீட்டின் தலைவர் அல்லது, வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்கிற நேர்வில், குடும்பத்தால் அல்லது குடும்ப அமைப்பால் குடும்ப அமைப்பின் தலைவரென ஏற்பிசைவு அளிக்கப்பட்ட ஆளாக இருக்கிற, குடும்ப அமைப்பின் தலைவர், மற்றும் பிறப்பு அல்லது இறப்பு அறிக்கை செய்யப்படவேண்டிய காலஅளவின்போது எந்த நேரத்திலும் அவர் வீட்டில்

இல்லாமலிருந்தால், அந்த வீட்டில் இருக்கிற தலைவரின் நெருங்கிய உறவினர், மற்றும் அத்தகைய ஆள் எவரும் இல்லாதிருந்தால், மேற்சொன்ன காலஅளவின்போது வீட்டில் இருக்கும் மூத்த வயது வந்த ஆண்;

(ஆ) மருத்துவமனை, நல்வாழ்வு மையம், மகப்பேறு அல்லது மருத்துவ இல்லம் அல்லது பிற அதே போன்ற நிறுவனத்தில் ஏற்படும் பிறப்புகளையும் இறப்புகளையும் பொறுத்தவரை, பொறுப்பிலுள்ள மருத்துவ அலுவலர் அல்லது அவரால் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட ஆள்;

(இ) சிறைச்சாலை ஒன்றில் ஏற்படும் பிறப்புகளையும் இறப்புகளையும் பொறுத்தவரை, அதன் பொறுப்பையுடைய சிறை அலுவலர்;

(ஈ) வழித்தங்கல்மனை, சத்திரம், விடுதி, அறச்சாலை, உணவு விடுதி, தங்கும் விடுதி, அருந்தகம், சாராயக்கடை, கள்ளுக்கடை அல்லது பொதுமக்கள் புழங்குமிடம் இவற்றில் ஏற்படும் பிறப்புகளையும் இறப்புகளையும் பொறுத்தவரை, அதன் பொறுப்பையுடையவர்;

(உ) பொது இடம் ஒன்றில் கைவிடப்பட்டு காணப்பட்டு புதிதாகப் பிறந்த குழந்தை அல்லது இறந்த உடல் எதனையும் பொறுத்தவரை, கிராமம் ஒன்றைப் பொறுத்த நேர்வில், கிராமத்தில் நாட்டாண்மைக்காரர் அல்லது நேரிணையான பிற அலுவலர் மற்றும் வெவ்வேறிடத்திலும், வட்டாரக் காவல் நிலையத்தின் பொறுப்பையுடைய அலுவலர்:

*வரம்புரையாக:* அத்தகைய குழந்தை அல்லது இறந்த உடலை எவர் காண்கிறாரோ அல்லது அத்தகைய குழந்தை அல்லது இறந்த உடல் எவருடைய பொறுப்பில் வைக்கப்படலாகுமோ அந்த ஆள் எவரும், அத்தகைய பொருண்மையை மேற்சொன்ன நாட்டாண்மைக்காரருக்கு அல்லது அலுவலருக்கு அறிவிக்கை செய்தல் வேண்டும்.

(ஊ) பிற இடம் எதிலும், வகுத்துரைக்கப்படலாகும் ஆள்.

(2) உட்பிரிவு (1) இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒரு பதிவுக் கோட்டத்தில் பெறப்பட்ட வரைக்கட்டுகளைக் கவனத்தில் கொண்டு, மாநில அரசாங்கம், ஆணை வாயிலாக, ஆணையில் குறித்துரைக்கலாகும் காலஅளவிற்கு, இதன் பொருட்டு பதவிப் பெயரால் மாநில அரசாங்கத்தால் குறித்துரைக்கப்படும் ஆள் எவரும், உட்பிரிவு (1) இன் கூறு (அ) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு மாற்றாக, அந்தக் கூறில் குறிப்பிடப்பட்டுள்ள வீடு ஒன்றில் ஏற்படும் பிறப்புகளையும் இறப்புகளையும் குறித்து தகவல் கொடுக்க வேண்டுமென்று அல்லது கொடுக்கப்படுமாறு செய்ய வேண்டுமென்று கோரலாம்.

தோட்டம் ஒன்றில் ஏற்படும் பிறப்புகளையும் இறப்புகளையும் குறித்த சிறப்பு வகையம்.

9. தோட்டம் ஒன்றில் ஏற்படும் பிறப்புகளையும் இறப்புகளையும் பொறுத்த நேர்வில், தோட்டத்தின் கண்காணிப்பாளர் பிரிவு 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவலைப் பதிவாளருக்குக் கொடுக்கவோ அல்லது கொடுக்கபடுமாறு செய்யவோ வேண்டும்:

*வரம்புரையாக:* பிரிவு 8 இன் உட்பிரிவு (2) இன் கூறுகள் (அ) முதல் (ஊ) வரையிலுள்ளவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்கள், தோட்டத்தின் கண்காணிப்பாளருக்குத் தேவையான விவரங்களை அளித்தல் வேண்டும்.

விளக்கம்—இந்தப் பிரிவில், "தோட்டம்" என்ற சொற்றொடர் பரப்பளவில் நான்கு ஹெக்டேருக்குக் குறையாதிருந்து, தேயிலை, காப்பி, மிளகு, ரப்பர், ஏலக்காய், சிங்கோனா அல்லது மாநில அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக குறித்துரைக்கலாகும் பிற விலைபொருட்கள் உற்பத்திக்கு ஏற்றதாகச் செய்யப்பட்டிருக்கிற அல்லது உள்ளபடியே அவற்றை உற்பத்தி செய்கிற நிலம் எதுவும் என்று பொருள்படும்; மற்றும் "தோட்டக் கண்காணிப்பாளர்" என்ற சொற்றொடர், ஒரு மேலாளர், கண்காணிப்பாளர் அல்லது பிற பெயர் எதனாலும் வழங்கப்பெறுவதாயினும் தோட்டத் தொழிலாளர்களையும் வேலைகளையும் பொறுப்பில் கொண்டிருக்கிற அல்லது கண்காணிக்கிற ஆள் என்றும் பொருள்படும்.

**பிறப்புகளையும் இறப்புகளையும் அறிக்கை செய்வதற்கும் இறப்பின் காரணத்தைச் சான்றளிப்பதற்கும் குறித்தசில ஆட்களின் கடமை.**

10. (1) எந்தப் பிறப்பு அல்லது இறப்பு அல்லது, இரண்டையும் அவர் அல்லது அவள் கவனித்தாரோ அல்லது அப்போது இருந்தாரோ அவை ஒவ்வொன்றையும் அல்லது இரண்டையும் அல்லது வகுத்துரைக்கலாகும் எந்தப் பகுதிகளில் அவை நிகழ்ந்தனவோ அந்தப் பகுதிகளையும் வகுத்துரைக்கப்படலாகும் காலத்திற்குள்ளும் முறையிலும் பதிவாளருக்கு அறிவிக்கை செய்வது—

(i) பிறப்பு அல்லது இறப்பு ஒன்றின்போது, பேறுகால உதவியாளர் அல்லது பிற மருத்துவ அல்லது நல்வாழ்வுத் துணையாள் எவரின்,

(ii) இறந்த உடல்களை அப்புறப்படுத்துவதற்காக ஒதுக்கிவைக்கப் பட்டுள்ள இடம் ஒன்றின் காப்பாளர் அல்லது உரிமையாளர் அல்லது அத்தகைய இடத்தில் இருக்க வேண்டும் என்று வட்டார அதிகாரஅமைப்பு ஒன்றால் வேண்டுறுத்தப்பட்டுள்ள ஆள் எவரின், அல்லது

(iii) மாநில அரசாங்கம், இதன்பொருட்டு பதவிப் பெயரால் குறித்துரைக்கலாகும் அந்தப் பிற ஆள் எவரின் கடமையாகும்.

(2) மாநில அரசாங்கம், பகுதி எதிலும், இதற்கென அங்கு கிடைக்கத்தக்க வசதிகளைக் கவனத்தில் கொண்டு, இறப்பிற்கான காரணம் குறித்த ஓர் உறுதிச்சான்று வகுத்துரைக்கலாகும் ஆளிடமிருந்து அத்தகைய படிவத்தில் பதிவாளரால் பெறப்பட வேண்டும் என்று வேண்டுறுத்தலாம்.

(3) இறப்பிற்கான காரணம் பொறுத்து, உட்பிரிவு (2) இன்படி உறுதிச்சான்று ஒன்றைப் பெற வேண்டும் என்று மாநில அரசாங்கம் வேண்டுறுத்துமிடத்து, எந்த ஆள், அவர் கடைசியாக நோயுற்றிருந்தபோது, ஒரு மருத்துவத் தொழிலாற்றுநரால் கவனிக்கப்பட்டாரோ அந்த ஆள் எவரும் இறந்துபோகையில், அந்த ஆளின் இறப்பிற்குப் பின்பு, மருத்துவத் தொழிலாற்றுநர் உடனடியாக, இறப்பு குறித்து இந்தச் சட்டத்தின்படி தகவல் கொடுக்குமாறு வேண்டுறுத்தப்பட்ட ஆளுக்குக் கட்டணம் எதனையும் விதிக்காமல், அவருடைய முழு அறிவுத்திறனுக்கும் நம்பிக்கைக்கும் தெரிந்தவரையில் இறப்பிற்கான காரணம் கூறி, வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் ஓர் உறுதிச்சான்றை அளித்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தால் வேண்டுறுத்தப்பட்டுள்ளபடி, இறப்பு குறித்து தகவல் கொடுக்கிற நேரத்தில், அந்த உறுதிச்சான்று அத்தகைய ஆளால் பெறப்பட்டு பதிவாளரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

**தகவலாளர் பதிவேட்டில் கையொப்ப மிடுதல்.**

11. இந்தச் சட்டத்தின்படி வேண்டுறுத்தப்பட்டுள்ள தகவல் எதனையும் பதிவாளருக்கு வாய்மொழியாகக் கொடுத்துள்ள ஒவ்வோர் ஆளும், இதன் பொருட்டு பேணி வரப்படுகிற பதிவேட்டில் அவருடைய பெயர், விவரிப்புகள், குடியிருக்கும் இடம் ஆகியவற்றை எழுத வேண்டும் மற்றும் அவர் எழுத முடியாவிட்டால், பதிவேட்டில் அவருடைய பெயர், விவரிப்புகள், குடியிருக்கும் இடம் ஆகியவற்றிற்கு எதிராக அவருடைய பெருவிரல் குறியை வைக்க வேண்டும். அத்தகையதொரு நேர்வில், விவரங்கள் பதிவாளரால் எழுதப்படுகிறது.

**பதிவுக் குறிப்புகளின் எடு குறிப்புகள் தகவலாளருக்கு கொடுக்கப்பட வேண்டும்.**

12. பதிவாளர், பிறப்பு அல்லது இறப்பு பதிவு செய்யப்படுவது நிறைவடைந்த உடனேயே, பிரிவு 8 அல்லது பிரிவு 9 இன் படி தகவல் கொடுக்கிற ஆளுக்கு, எவ்வளவு விரைவில் கூடுமோ அவ்வளவு விரைவில், கட்டணமின்றி அத்தகைய பிறப்பு அல்லது இறப்பு தொடர்பான பதிவேட்டிலிருந்து வகுத்துரைக்கப்பட்டுள்ள விவரங்களின் ஓர் எடு குறிப்பைத் தம் கையொப்பமிட்டுக் கொடுக்க வேண்டும்.

**பிறப்புகளையும் இறப்புகளையும் காலந்தாழ்த்திப் பதிவு செய்தல்.**

13. (1) எந்தப் பிறப்பு அல்லது இறப்பு பொறுத்து அதற்காகக் குறித்துரைக்கப்பட்டுள்ள காலஅளவின் முடிவிற்குப் பின்பு, ஆனால், அது நிகழ்ந்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவாளருக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பிறப்பு அல்லது இறப்பு எதுவும், வகுத்துரைப்படலாகும் காலத்தாழ்வுக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) எந்தப் பிறப்பு அல்லது இறப்பு பொறுத்து, அது நிகழ்ந்ததிலிருந்து முப்பது நாட்களுக்குப் பின்பு, ஆனால் ஓர் ஆண்டிற்குள், காலத்தாழ்வாகத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பிறப்பு அல்லது இறப்பு எதுவும், வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பின் எழுத்து மூலமான அனுமதியுடனும், வகுத்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்படுவதன் பேரிலும், ஒரு சான்றுறுதி அலுவலரின் அல்லது மாநில அரசாங்கத்தால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிற அலுவலர் எவரின் முன்னிலையில் செய்யப்பட்ட ஒரு ஆணையுறுதி ஆவணத்தை முன்னிடுவதன் பேரிலும் மட்டுமே பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

இந்தியா தலைமை பதிவாள

(3) எந்தப் பிறப்பு அல்லது இறப்பு அது நிகழ்ந்ததிலிருந்து ஓராண்டிற்குள் பதிவு செய்யப்படவில்லையோ அந்தப் பிறப்பு அல்லது இறப்பு எதுவும், முதல் வகுப்புக் குற்றவியல் நடுவரால், அல்லது மாகாணத் தலைநகர் குற்றவியல் நடுவரால், பிறப்பு அல்லது இறப்பின் சீர்மையைச் சரிபார்த்த பின்பு பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையின் பேரிலும், வகுத்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் பேரிலும் மட்டுமே பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின் வகையங்கள், பிறப்பு அல்லது இறப்பு எதற்காகவும் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்திற்குள் அதனைப் பதிவு செய்வதற்குத் தவறுகிற ஆளுக்கு எதிராக எடுக்கப்படலாகும் நடவடிக்கை எதற்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய பிறப்பு அல்லது இறப்பு எதுவும், அத்தகைய நடவடிக்கை எதுவும் முடிவுறாநிலையில் பதிவு செய்யப்படலாம்.

முதன்மை பதிவாள

குழந்தையின் பெயரைப் பதிவுசெய்தல்.

14. குழந்தை எதனின் பிறப்பு, பெயர் எதுவுமின்றிப் பதிவு செய்யப்படுமிடத்து, அந்தக் குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளர், வகுத்துரைக்கப்பட்டுள்ள காலஅளவிற்குள் குழந்தையின் பெயர் பொறுத்து தகவலைப் பதிவாளருக்கு வாய்மொழியாகவோ அல்லது எழுத்திலோ கொடுத்தல் வேண்டும்; மற்றும் அதன் பின்பு பதிவாளர், அத்தகைய பெயரைப் பதிவேட்டில் பதிவுசெய்து கையொப்பமும் தேதியும் இடுதல் வேண்டும்.

பதிவேட்டிலுள்ள பிறப்புகள் மற்றும் இறப்புகளின் பதிவைச் சரிசெய்தலும் அறவு செய்தலும்.

15. இந்தச் சட்டத்தின்படி பதிவாளரால் வைக்கப்பட்டிருக்கும் பதிவேடு எதிலும் செய்யப்பட்ட பிறப்பு அல்லது இறப்பு குறித்த பதிவு எதுவும், படிவத்திலோ, பொருளிலோ தவறாக இருக்கிறது அல்லது மோசடியாக அல்லது முறையற்று செய்யப்பட்டிருக்கிறது என்று பதிவாளர் தெளிவுறக் காணுமாறு மெய்ப்பிக்கப்படுமாயின், அவர் அத்தகைய பதிவுகள் எந்த வரைக்கட்டுகளின் பேரில் மற்றும் எந்தச் சூழ்நிலைகளில் சரிசெய்யப்படலாம் அல்லது அறவு செய்யப்படலாம் என்பது பொறுத்து மாநில அரசாங்கத்தால் செய்யப்படலாகும் விதிகளுக்குட்பட்டு, மூலப்பதிவில் மாற்றம் எதுவும் இல்லாமல் பக்க ஓரத்தில் தகுந்த பதிவைச் செய்வதன் வாயிலாகப் பதிவைச் சரிசெய்யலாம் அல்லது அறவு செய்யலாம்; மற்றும் பக்க ஓரப்பதிவில் கையொப்பமிட்டு, சரிசெய்த அல்லது அறவு செய்த தேதியை அதில் சேர்க்க வேண்டும்.

## அத்தியாயம் IV

பதிவுக் கோட்ட

### பதிவுக்கட்டுகளையும் புள்ளிவிவரங்களையும் பேணி வருதல்

பதிவாளர்கள், வகுத்துரைக் கப்பட்டுள்ள படிவத்தில் பதிவேடுகளை வைத்து வருதல்.

மாவட்ட பதிவாள

16. (1) ஒவ்வொரு பதிவாளரும், அவர் எந்தப் பதிவு வட்டாரம் அல்லது அதன் பகுதி எதனையும் பொறுத்து அதிகாரவரம்பு செலுத்துகிறாரோ அந்தப் பதிவு வட்டாரத்திற்காக அல்லது அதன் பகுதிக்காக, பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவேடு ஒன்றை, வகுத்துரைக்கப்படும் படிவத்தில் வைத்துவருதல் வேண்டும்.

(2) முதன்மைப் பதிவாளர், அவ்வப்போது, வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும் அறிவுறுத்தலின்படியும் பிறப்புகளையும் இறப்புகளையும் பதிவு செய்வதற்குப் போதுமான எண்ணிக்கையில் பதிவேட்டுப் புத்தகங்கள் அச்சிட்டப்பட்டு வழங்குமாறு செய்தல் வேண்டும்; மற்றும் வட்டார மொழியில் அத்தகைய படிவங்களின் படி ஒன்று, ஒவ்வொரு பதிவாளர் அலுவலகத்திலும் வெளிப்புறக் கதவில் அல்லது அருகில் தெளிவாகத் தெரிகிற ஏதாவது இடத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்.

17. (1) கட்டணங்கள் செலுத்துதல் மற்றும் அஞ்சல் கட்டணங்கள் தொடர்பான விதிகள் உள்ளடங்கலாக, மாநில அரசாங்கத்தால் இதன் பொருட்டு செய்யப்பட்ட விதிகள் எவற்றிற்கும் உட்பட்டு, ஆள் எவரும்,— பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவேட்டின் சோதனை.

(அ) பதிவு எதற்காகவும் பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவேடு ஒன்றில் பதிவாளரால் சோதனை செய்யப்படுமாறு செய்யலாம்;

(ஆ) பிறப்பு அல்லது இறப்பு எதுவும் தொடர்பாக அத்தகைய பதிவேட்டிலிருந்து ஓர் எடுகுறிப்பைப் பெறலாம்:

வரம்புரையாக: இறப்பு எதுவும் தொடர்பாக, ஆள் எவருக்கும் வழங்கப்பட்ட எடுகுறிப்பு எதுவும், பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டபடி இறப்பின் காரணம் குறித்து விவரங்களை வெளியிடுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்படும் அனைத்து எடுகுறிப்புகளும், பதிவாளரால் அல்லது இந்தியச் சாட்சியச் சட்டம், 1872 (சட்டம் 1/1872) இன் பிரிவு 76இல் வகை செய்யப்பட்டுள்ளபடி அத்தகைய எடுகுறிப்புகளைக் கொடுப்பதற்கு மாநில அரசாங்கத்தால் அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவராலும் சான்றளிக்கப்பட வேண்டும் மற்றும் எந்தப் பிறப்பு அல்லது இறப்புக்கு அந்தப் பதிவு தொடர்புடையதோ அதனை மெய்ப்பிக்கும் நோக்கத்திற்காகச் சாட்சியமாக ஏற்கத்தக்கதாகும்.

18. மாவட்டப் பதிவாளரால் குறித்துரைக்கப்படலாகும் முறையிலும் அதிகாரஅமைப்பினாலும் பதிவு அலுவலகம் ஆய்வு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அதில் வைத்திருக்கப்படும் பதிவேடுகள், பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும். பதிவு அலுவலகங்களை ஆய்வு செய்தல்.

19. (1) ஒவ்வொரு பதிவாளரும், வகுத்துரைக்கப்படலாகும் கால இடைவெளிகளிலும் படிவத்திலும் அத்தகைய பதிவாளரால் வைத்து வரப்படும் பதிவேட்டில் பிறப்புகள் மற்றும் இறப்புகளின் பதிவு தொடர்பான ஒரு விவரஅறிக்கையை முதன்மைப் பதிவாளருக்கு அல்லது அவரால் குறித்துரைக்கப்பட்டுள்ள அலுவலர் எவருக்கும் அனுப்புதல் வேண்டும். பதிவாளர்கள் தொகுத்தலுக்காகக் காலமுறை அறிக்கையை முதன்மைப் பதிவாளருக்கு அனுப்புதல்.

(2) முதன்மைப் பதிவாளர், பதிவாளர்களால் அனுப்பப்பட்ட விவர அறிக்கையிலுள்ள தகவல்கள் தொகுக்கப்படுமாறு செய்தல் வேண்டும்; மற்றும் அந்த ஆண்டின்போது, பதிவுசெய்யப்பட்ட பிறப்புகள் மற்றும் இறப்புகள் பொறுத்த ஒரு புள்ளி விவரஅறிக்கையை வகுத்துரைக்கப்படலாகும் கால இடைவெளிகளிலும் படிவத்திலும் பொது மக்களின் தகவலுக்காக வெளியிடுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

### பல்வகை

20. (1) தலைமைப் பதிவாளர், இதன்பொருட்டு மைய அரசாங்கத்தால் செய்யப்படலாகும் விதிகளுக்குட்பட்டு, இந்தியத் துணைத் தூதரகங்களில் இந்தியாவுக்கு வெளியேயுள்ள இந்தியக் குடிமக்களை, குடிமைச் சட்டம், 1945இன்படி பதிவு செய்வது தொடர்பான விதிகளின்படி அவரால் பெறப்பட்ட அத்தகைய குடிமக்களின் பிறப்புகள் மற்றும் இறப்புகள் குறித்த தகவல் பதிவுசெய்யப்படுமாறு செய்தல் வேண்டும். இந்தியாவிற்கு வெளியேயுள்ள குடிமக்களின் பிறப்புகள் மற்றும் இறப்புகளின் பதிவு குறித்த தனியுறு வகையம்.

(2) உட்பிரிவு (1)இல் வகை செய்யப்பட்டுள்ளபடி இந்தியாவிற்கு வெளியில் பிறந்த எந்தக் குழந்தையைப் பற்றித் தகவல் கிடைக்கவில்லையோ அந்தக் குழந்தையைப் பொறுத்த நேர்வில், குழந்தையின் பெற்றோர்கள் இந்தியாவிற்கு, அங்கு நிலையாகத் தங்கியிருக்கும் நோக்கத்துடன் திரும்புவாரானால், குழந்தை, இந்தியா வந்துசேர்ந்த தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் எந்த நேரத்திலும் அந்தக் குழந்தை இந்தியாவில் பிறந்தது போன்றே அந்தக் குழந்தையின் பிறப்பு இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுமாறு செய்தல் வேண்டும்; மற்றும் பிரிவு 13இன் வகையங்கள், மேற்சொன்ன அறுபது நாள் காலஅளவு முடிவுற்ற பின்பு அந்தக் குழந்தையின் பிறப்பிற்கும் பொருந்தும்.

*பிறப்பு அல்லது இறப்பு குறித்து தகவல் பெற பதிவாளரின் அதிகாரம்.*

21. பதிவாளர், ஆள் எவரையும், அந்த ஆள் குடியிருக்கிற வட்டாரத்திற்குள் ஏற்படும் பிறப்பு அல்லது இறப்பு தொடர்பாக, அவருக்குத் தெரிந்த தகவல் எதனையும் வாய்மொழியாகவோ அல்லது எழுத்திலோ அளிக்கும்படி வேண்டுறுத்தலாம், மற்றும் அந்த ஆள் அத்தகைய வேண்டுறுத்தத்திற்கு இணங்கக் கட்டுப்பட்டவராவார்.

*பணிப்புரைகளைப் பிறப்பிப்பதற்கு அதிகாரம்.*

22. மைய அரசாங்கம், மாநில அரசாங்கம் எதற்கும், இந்தச் சட்டத்தின் வகையங்களில் எதனையும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி எதனையும் மாநிலம் எதிலும் நிறைவேற்றுவதற்குத் தேவையானதாகத் தோன்றும் பணிப்புரைகளைப் பிறப்பிக்கலாம்.

*தண்டங்கள்.*

23. (1) (அ) பிரிவுகள் 8 மற்றும் 9இன் வகையங்களில் எதன்படியும் எந்தத் தகவல் கொடுப்பது அவருடைய கடமையாக இருக்கிறதோ அந்தத் தகவல் எதனையும் தகுமான காரணமின்றிக் கொடுக்க தவறுகிற, அல்லது

(ஆ) பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவேடு எதிலும் புகுத்தும் நோக்கத்திற்காக, தெரிந்து பதிவு செய்யப்படவேண்டுமென வேண்டுறுத்தப்பட்டுள்ள விவரங்களில் எதனைக் குறித்தும், தாம் பொய்யானதென அறிந்திருக்கிற அல்லது நம்புகிற தகவல் எதனையும் கொடுக்கிற அல்லது கொடுக்கப்படுமாறு செய்கிற, அல்லது

(இ) பிரிவு 11ஆல் வேண்டுறுத்தப்பட்டுள்ளபடி பதிவேட்டில் அவருடைய பெயர், விவரிப்பு, குடியிருப்பிடம் ஆகியவற்றை எழுதுவதற்கு அல்லது அவருடைய பெருவிரல் குறியை வைப்பதற்கு மறுக்கிற

ஆள் எவரும், ஐம்பது ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

(2) தனது அதிகாரவரம்பில் ஏற்படுகிற பிறப்பு அல்லது இறப்பு எதனையும் பதிவு செய்யாமல் அல்லது பிரிவு 19இன் உட்பிரிவு (1) ஆல் வேண்டுறுத்தப்பட்டுள்ளபடி விவரஅறிக்கைகள் எதனையும் பணிந்தனுப்பாமல் புறக்கணிக்கிற அல்லது அவ்வாறு செய்ய மறுக்கிற பதிவாளர் அல்லது துணைப் பதிவாளர் எவரும், ஐம்பது ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

(3) பிரிவு 10இன் உட்பிரிவு (3)இன்படி ஓர் உறுதிச்சான்றை வழங்காது புறக்கணிக்கிற அல்லது வழங்க மறுக்கிற மருத்துவத் தொழிலாற்றுநர் எவரும், மற்றும் அத்தகைய சான்றை ஒப்புவிக்காது புறக்கணிக்கிற அல்லது ஒப்புவிக்க மறுக்கிற ஆள் எவரும், ஐம்பது ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(4) இந்தச் சட்டத்தின் எந்த வகையத்தின் மீறுகைக்குத் தண்டம் எதுவும், இந்தப் பிரிவில் வகைசெய்யப்படவில்லையோ, அந்த வகையம் எதனையும் தகுமான காரணமின்றி மீறுகிற ஆள் எவரும், பத்து ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

(5) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1898 (5/1898) இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தப் பிரிவின்படியான குற்றச்செயல் ஒன்று, ஒரு குற்றவியல் நடுவரால் சுருக்குமுறையில் விசாரிக்கப்படுதல் வேண்டும்.

*குற்றச் செயல்களை ஒருங்கொத்து முடிவு செய்வதற்கு அதிகாரம்.*

24. (1) வகுத்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்குட்பட்டு, ஒரு பொது அல்லது தனியுறு ஆணை வாயிலாக, முதன்மைப் பதிவாளரால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும், இந்தச் சட்டத்தின்படி குற்றவழக்குத் தொடுக்கப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ குற்றச்செயல் ஒன்றைச் செய்திருக்கிற அல்லது செய்திருப்பதாகத் தகுமானதாக ஐயுறப்படுகிற ஆளிடமிருந்து ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத ஒரு பணத் தொகையை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) அத்தகைய பணத் தொகையைச் செலுத்துவதன் பேரில், அத்தகைய குற்றச்செயல் பொறுத்து அவருக்கு எதிராக மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கலாகாது.

25. இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலுக்காக, முதன்மைப் பதிவாளரால் ஒரு பொது அல்லது தனியுறு ஆணையால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரால் தவிர குற்றவழக்கு தொடரப்படுதலாகாது. குற்ற வழக்குத் தொடர்வதற்கு ஒப்பளிப்பு.

26. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதற்கும் இணங்கிச் செயற்படும்போது அல்லது செயற்படுவதாகப் புலப்படுகிறபோது, அனைத்துப் பதிவாளர்களும், சார்பதிவாளர்களும் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 21 இன் பொருளின்படி அரசுப் பணியாளர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும். பதிவாளர்களும் சார்பதிவாளர்களும் அரசுப் பணியாளர்களாகக் கொள்ளப்படுதல்.

27. மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, (பிரிவு 30 இன்படி விதிகள் செய்வதற்கான அதிகாரம் நீங்கலாக) இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்டுள்ள விதிகளின்படி அதனால் செலுத்தத்தக்க அதிகாரம் எதுவும், பணிப்புரையில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்குட்பட்டு, அந்தப் பணிப்புரையில் குறித்துரைக்கப்படலாகும் மாநில அரசாங்கத்திற்குக் கீழமைந்த அலுவலரால் அல்லது அதிகாரமைப்பால்கூட செலுத்தத்தக்கதாகுமென்று பணிக்கலாம். அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.

28. (1) இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதற்கும் இணங்க நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட எதற்காகவும் அரசாங்கம், தலைமைப் பதிவாளர், பதிவாளர் எவருக்கும், அல்லது இந்தச் சட்டத்தின்படி அதிகாரம் எதனையும் செலுத்துகிற அல்லது கடமை எதனையும் ஆற்றுகிற ஆள் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதையும் தொடருதல் ஆகாது. நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

(2) இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதற்கும் இணங்க நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனாலும் ஏற்பட்ட அல்லது பெரும்பாலும் ஏற்படக்கூடிய சேதம் எதற்காகவும், அரசாங்கத்திற்கு எதிராக உரிமைவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதையும் தொடருதல் ஆகாது.

29. இந்தச் சட்டத்திலுள்ள எதுவும் பிறப்புகள், இறப்புகள் மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம், 1886 இன் வகையங்களைக் குறைவுறச் செய்வதாகப் பொருள்கொள்ளப்படுதலாகாது. இந்தச் சட்டம் சட்டம் 6/1886ஐக் குறைவுறச் செய்யாது.

30. (1) மாநில அரசாங்கம், மைய அரசாங்கத்தின் ஒப்புதலுடன், அதிகார முறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்காக விதிகள் செய்யலாம். விதிகள் செய்வதற்கு அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேற்சொன்ன வகையத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள்—

(அ) இந்தச் சட்டத்தின்படி வைத்துவரப்பட வேண்டுறுத்தப்பட்டுள்ள பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவேடுகளின் படிவங்கள்;

(ஆ) எந்தக் காலஅளவிற்குள் மற்றும் எந்தப் படிவத்திலும் முறையிலும் பிரிவு 8 இன்படி பதிவாளருக்குத் தகவல் கொடுக்கப்பட வேண்டுமோ அந்தக் காலஅளவு, படிவம், முறை;

(இ) எந்தக் காலஅளவிற்குள் மற்றும் எந்த முறையில் பிரிவு 10 இன் உட்பிரிவு (1)இன்படி பிறப்புகள் மற்றும் இறப்புகள் அறிவிக்கை செய்யப்பட வேண்டுமோ அந்தக் காலஅளவு மற்றும் முறை;

(ஈ) எந்த ஆளிடமிருந்து மற்றும் எந்தப் படிவத்தில் இறப்பின் காரணம் பொறுத்த உறுத்திச்சான்று ஒன்று பெறப்பட வேண்டுமோ அந்த ஆள் மற்றும் படிவம்;

(உ) எந்த விவரங்களின் எடுகுறிப்பு, பிரிவு 12 இன்படி கொடுக்கப்படலாகுமோ அந்த விவரங்கள்;

(ஊ) எந்த அதிகாரஅமைப்பு, பிரிவு 13 இன் உட்பிரிவு (2) இன்படி பிறப்பு அல்லது இறப்பினைப் பதிவு செய்ய அதிகாரம் வழங்குமோ அந்த அதிகாரஅமைப்பு;

(எ). பிரிவு 13 இன்படி செய்யப்பட்ட பதிவுக்குச் செலுத்தத்தக்க கட்டணங்கள்;

(ஏ) பிரிவு 4 இன் உட்பிரிவு (4) இன்படி முதன்மைப் பதிவாளரால் அறிக்கைகள் பணித்தனுப்பப்படுதல்;

(ஐ) பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகளைச் சோதனை செய்தல் மற்றும் அத்தகைய சோதனைக்கும் அத்தகைய பதிவேடுகளிலிருந்து எடு குறிப்புகள் வழங்குவதற்கும் செலுத்தத்தக்க கட்டணங்கள்;

(ஒ) எந்தப் படிவங்களில் மற்றும் எந்தக் கால இடைவெளிகளில் பிரிவு 19 இன்படி விவரஅறிக்கைகள் மற்றும் புள்ளிவிவர அறிக்கைகள் வழங்கவும் வெளியிடப்பட வேண்டுமோ அந்தப் படிவம் மற்றும் கால இடைவெளிகள்;

(ஓ) பதிவாளர்களால் வைத்துவரப்படும் பதிவேடுகள் மற்றும் பதிவுக்கட்டுகளின் பாதுகாப்பு, முன்னிலைப்படுத்துகை மற்றும் மாற்றம்;

(ஔ) பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவேட்டில் பிழை சரிசெய்தலும் பதிவுகளை அறவு செய்தலும்;

(க) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற ஏதேனும் பொருட்பாடு

ஆகியவற்றிற்கு வகைசெய்யலாம்.

நீக்கறவும் காப்பும்.

31. (1) பிரிவு 29 இன் வகையங்களுக்கு உட்பட்டு, மாநிலம் எதிலும் அல்லது அதன் பகுதியில் இந்தச் சட்டம் செல்லாற்றல் பெறுவது முதற்கொண்டு, இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் தொடர்பாக அங்கு செல்லாற்றலில் இருக்கும் அளவுக்குச் சட்டம் எதுவும் அத்தகைய மாநிலத்தில் அல்லது, நேர்வுகேற்ப, பகுதியில் நீக்கறவு செய்யப்பட்டிருக்கும்.

(2) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்டிருந்த போதிலும் (வழங்கப்பட்ட அறிவுறுத்தல் அல்லது பணிப்புரை எதுவும், செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதி அல்லது விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் உள்ளடங்கலாக) அத்தகைய செயல் அல்லது நடவடிக்கை, இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் எந்த அளவுக்கு முரணானதாக இல்லையோ அந்த அளவுக்கு, அத்தகைய செயல் செய்யப்பட்டபோது அல்லது நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, செல்லாற்றலில் இருந்தாற்போன்று மேற்சொன்ன வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் நீக்கம் செய்யப்படும்வரையில் அதன்படி செல்லாற்றலில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கு அதிகாரம்.

32. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு, மாநிலம் ஒன்றின் பகுதி எதற்கும் அவைகளை பொருந்தச் செய்யும்போது செல்திறம் அளிப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மாநில அரசாங்கம், மைய அரசாங்கத்தின் ஒப்புதலுடன், ஆணை வாயிலாக, இடர்ப்பாடுகளை அகற்றுவதற்குத் தேவையென அல்லது உகந்ததெனத் தோன்றும் இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாகாத வகையங்களைச் செய்யலாம் அல்லது பணிப்புரைகளை இடலாம்:

*வரம்புரையாக:* ஒரு மாநிலத்தின் பரப்பிடம் எதனைப் பொறுத்தும், அந்தப் பகுதியில் இந்தச் சட்டம் எந்தத் தேதியன்று செல்லாற்றல் பெற்றதோ அந்தத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற பின்பு, இந்தச் சட்டத்தின்படி ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதலாகாது.